# ஏழைகள் வாழ்வு ஏற்றமடையவே தனி நாடு கேட்கிறோம்

## நம்மிடைக் கட்டுப்பாடு மிகமிக முக்கியமானது

(:0:)

## இன்று நம்மைத் திட்டுபவர்கள் நாளை நம்முடன் சமாதானப் பேசுவர்

(0)

### திராவிட நாடு கிடைப்பது உறுதி

### அறிஞர் அண்ணாத்துரை சொற்பெருக்கு

காஞ்சிபுரம், டிச, 24—

“நம்முடைய திராவிடப் பிரச்னையை சர். ஏ. இராம்சாமி முதலியார் ஐ. நா. சபைக்கு எடுத்துச் சென்றாலும் நான் ஆச்சரியப்பட மாட்டேன். காரணம் அவ்வளவு நிச்சயமாக திராவிட நாடு பிரச்னை எதிரிகள் முகாமிலே பேசப்பட்டு வருகிறது”

“இன்று நம்மைத் தாக்கிப் பேசிக்கொண்டு இருப்பவர்கள், இன்னும் சில ஆண்டுகளிலே நம்மை வரவழைத்துச் சமாதானம் பேசத்தான் போகிறார்கள், இது உறுதி. திராவிட நாடு பிரிவினை நமக்குக் கிடைத்தால், அதில் நிர்வாகம் எப்படி இருக்கும் என்பதை உங்களுக்குக் காட்டவே, நமது தம்பிமார்களுக்குத் தனி-தனிப் பொறுப்பைத் தந்து பேசப் பணித்தேன்” என்று இன்று மாலை நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டின்போது, பொதுச் செயலாளர் தோழர் சி. என். அண்ணாத்துரை குறிப்பிட்டார்.

அவ்வமயம் கூடியிருந்த சுமார் 30 ஆயிரம் மக்கள் அசையாது இருந்து அண்ணாவின் பேச்சைச் செவிமடுத்தனர்.

மேலும் பேசும்போது அண்ணாத்துரை சொன்னதாவது:—

தலைவர் அவர்களே! தோழர்களே!! கடந்த இரண்டு தினங்களாக மாநாடு சிறப்பாக நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய நண்பர்களுக்கு எனது நன்றி.

எனக்கு முன் பேசிய தோழர்கள் எல்லாம் உங்களுக்குத் தேவையான திட்டத்தை நன்றாக விளக்கிச் சொன்னார்கள். ஒவ்வொருவரும் தனித்—தனித் தலைப்பில் பேசினார்கள்.

#### பண்பு இல்லையா?

சமீபத்தில் சட்ட சபையில் உறுப்பினர் ஒருவர் கேட்ட கேள்வியின்போது அமைச்சர் பதிலளித்த விதம் தான் நாம் இந்த முறையைக் கைக்கொள்ள செய்தது.

“திராவிடக் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் கொள்கை என்ன” என்று மெம்பர் கேட்டார் அமைச்சரை. அதற்கு அமைச்சர் சொல்லுகிறார். பெரியாரையோ அண்ணாத்துரையோ கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று. மந்திரியாருக்கு உண்மையிலேயே தெரியாமலிருக்கலாம், அல்லது தெரிந்தும் தெரியாதவரைப் போல் காட்டிக்கொண்டிருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழக கொள்கையைப் பற்றித் திட்டவட்டமாக நான் இங்குக் கூற ஆசைப்படுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அரசியல் பொருளாதாரத் துறையிலிருந்து விடுபடுவதேதான். அதுதான் எங்களுடைய கொள்கை பண்புயாவும். ஆகவேதான் நான் தனித் தனியாக தலைப்பைத் தந்து எனது தம்பிமார்

(3ம் பக்கம் பார்க்க)

Phone: No. 4502 | Regd: No. M. 5458

இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 26—12—50 | மணி 24

## திராவிடரை நசுக்க ஆட்சியாளரின் சூழ்ச்சி

(0)

## நமக்கேற்பட்ட சோதனையும் நம் சாதனையும்

(0)

### வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் அண்ணாமலை சொற்பொழிவு

காஞ்சி, டிச. 23—

காஞ்சீபுரத்தில் 23-ம் தேதி நடந்த செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாட்டின் துவக்கத்தில், மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளையும் மற்றையோரையும் வரவேற்புக் கழகத் தலைவராகிய தோழர் சி. வி. எம். அண்ணாமலை வரவேற்று முகமன் கூறி ஆற்றிய சொற்பெருக்கின் சாரம் வருமாறு:—

மாநாட்டின் பிரதிநிதிகளாக வந்துள்ள என் அருமைத் தோழர்களே! தாய்மார்களே!! உங்கள் அனைவரையும், மாநாட்டின் வரவேற்புக்குழு சார்பிலே வருக! வருக என உரிமையுடனும், உவகையுடனும் எனது வணக்கத்துடனும் அன்புடனும் வரவேற்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாட்டை காஞ்சியில் நடத்த வேண்டுமென மாநாட்டுக் குழு கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர்த் தீர்மானித்தது. இந்தக் குறுகிய நாட்களுக்குள் பேச்சுரிமையை நிலைநாட்டக் குன்றத்தூரில் வழக்கு சம்பந்தமான செலவு நிதிக்காக, அண்மையில்—பத்து நாட்களுக்கு முன் ஒரு நாடகத்தையும் நடத்தினோம்.

நாங்களே நடிகர்களாகவும், அதன் முக்கிய கவனிப்பாளர்களாகவும் இருந்து நாடகத்தை நடத்தினோம். அதில் வந்த தொகை ரூ. 1000 பொதுச் செயலாளர் அண்ணாவிடம் கொடுத்திருக்கிறோம். இவற்றை ஏன் இங்குக் குறிப்பிடுகிறேன் என்றால், மாநாட்டின் கவனத்தை முழுமையும் கவனிக்கமுடியாமல் போய்விட்டது என்பதற்காகவும், நீங்களும் அறிய வேண்டுமென்பதற்காகவும் தான். ஆகையினால் தோழர்களே! இந்த மாநாட்டில் இடவசதி குறை ஏதாவது இருந்தால் அதற்குக் காலக்குறைவு தான் என்பதை நீங்கள் அறிய வேண்டுகிறேன்.

தோழர்களே! நமது எதிர்காலம் இனிச் சோதனை நிறைந்ததாகவும், ஆனால் சாதனை உள்ளதாகவும் இருக்குமென்பது நீங்கள் அறிந்ததே!

இன்றைய ஆட்சியாளர்கள் நம்மையும் நம் இயக்கத்தையும் எப்படியாவது ஒழித்துக்கட்ட வேண்டுமெனத் தீர்மானித்து விட்டார்கள். அதன் முதல் துவக்க விழாவாகத்

2-ம் பக்கம் பார்க்க

## காஞ்சீபுரம் மாநாட்டுக் காட்சிகள்

—0—

## இலட்சம் பேருக்கு மேற்பட்ட மக்கள் கூட்டம்

(நமது தனி நிருபர்)

காஞ்சிபுரம், டிச. 24—

செங்கற்பட்டு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்றது, இதன் சுருக்கம் ஏற்கனவே மாலை மணியில் வெளி வந்துள்ளது.

மாநாடு நடைபெற்ற கடந்த இரண்டு நாட்களிலும் சுமார் லட்சம் பேர் கலந்து கொண்டு மாநாட்டைச் சிறப்பித்தார்கள்.

கடந்த வெள்ளிக்கிழமையன்றே பொது மக்கள் கூட்டம் கூட்டமாக வந்துகொண்டே இருந்தனர். காஞ்சிக்கு வரும் புகைவண்டிகளில் தி. மு. கழகக் கொடிகளைக் கட்டிக் கொண்டு கழகத் தோழர்கள் வந்த வண்ணமிருந்தனர்.

சனிக்கிழமை காலை காஞ்சி நகரெங்கும் மக்கள் கூட்டம். கடைகள், ஓட்டல்கள் எல்லாம் மக்கள் கூட்டம். எங்கும் இதே பேச்சுத் தான்.

#### பந்தல் அலங்காரம்

மாநாடு நடைபெறும் இடமான

(4-ம் பக்கம் பார்க்க)

# மாலைமணி

சென்னை 26—12—50 செவ்வாய்க்கிழமை

## காஞ்சீபுரம் காட்டும் வழி

காஞ்சீபுரத்தில் 23, 24-ஆந் தேதிகளில் செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்தது. எள்விழ இடமின்றி மக்கள் குழுமி, தலைவர்கள் சொற்பெருக்கைக் கேட்டனர்; "சந்திர மோகன," "நீதிதேவன் மயக்கம்," நாடகங்களைக் கண்டனர்.

காஞ்சீபுரம் மாநாடு மற்றைக் கட்சியினர் கூடிக்கலையும் மாநாடன்று. திராவிட முன்னேற்றக் கழகத்தின் பண்பு என்ன? கொள்கை என்னவென்பவைகளை அறிந்திராத நம் நாட்டு அரசாங்கத்துக்கு அறிவித்து, அதன் உறக்கக் கண்களை விழிக்கவைக்கும் மாநாடாகும்.

மாநாட்டில் பிரதிநிதிகளை வரவேற்ற தலைவர் முதல், பொதுச் செயலாளர் வரை ஆற்றியுள்ள சொற்பெருக்குகள் திராவிடர் இயக்கம் ஏன் தொண்டாற்றுகிறது என்பதை மந்த மதியினரும் புரிந்து கொள்ள வைப்பவைகளாயிருக்கின்றன.

அரசாங்கம் நம்மீது துவேஷங்கொண்டு எவ்வெவ்வையால் நம்மை அடக்க முயற்சிக்கின்றது என்பதும், பேச்சுரிமை எங்ஙனம் பறிக்கப்படுகிறது என்பதும் நேர்மையற்ற முறையில் அடக்கு முறைகள் எங்ஙனம் அரசாங்கம் கையாளுகிறது என்பதும் தலைவர்களின் சொற்பெருக்குகளில் நன்கு தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றன.

அரசாங்கம் இங்ஙனம் அடக்குமுறைப் பேயாட்டத்தில் இறங்கி, நம் இயக்கம் எத்தகைய கொள்கையுடைய தென்பதையே அமைச்சர்கள் அறிந்து கொள்ளமுடியா நிலையில் இருந்து வரும் இச்சமயத்தில், நமக்கு எத்தகைய பொறுப்புகள் இருக்கின்றன என்பதை நம் தலைவர் அறிஞர் அண்ணா மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். நம் கட்சித் தோழர்கள் திராவிடம் தனி நாடானால் எங்ஙனம் நிர்வாகம் செய்யக் கூடியவர்கள் என்பதை அமைச்சர்களுக்கு உணர்த்தும் வகையில், நம் தோழர்களுடைய ஆற்றலை வெளிப்படுத்தும் வகையிலே, நாட்டு நலனுக்குகந்த பல முக்கியப் பிரச்னைகளைப்பற்றிப் பயன் தரக்கூடிய சொற்பொழிவுகளைச் செய்யுமாறு நம் தலைவர் பணித்து, அவ்வாறே தோழர்கள் பல முக்கியப் பிரச்னைகளைப் பற்றி பேசி, தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தியிருப்பது அமைச்சர்களின் கண்களைத் திறந்து வைப்பதாகும்.

இறுதியாக, ஆந்திரரோ, கன்னடரோ, மலையாளிகளோ எவர் ஒப்பினலும் ஒப்பாவிட்டாலும் திராவிட நாடு வரப்போவது உறுதி என்றும், இன்று நம்மை ஏசுபவர்களே நாளை நம்மைச் சமாதானத்துக்கு அழைத்துப் பேசுவார்கள் என்றும் நம் தலைவர் உறுதியாக எடுத்துக் கூறியிருப்பது கவனிக்கத்தக்கதாகும். எனவே திராவிட நாடு பிரிவது உறுதியாகையால், திராவிடத் தோழர்கள் தங்கள் மீதுள்ள புதிய பல பெரும் பொறுப்புகளை உணர்ந்து, நம்மிடை என்றும் தளராக் கட்டுப்பாட்டை ஏற்படுத்திக்கொண்டு, மனத்தளர்ச்சி சற்றுமின்றி இயக்க உணர்ச்சிக்கான வேலைகளை இடையறாது செய்துகொண்டு போகவேண்டும் என்று நம் தலைவர் அறிஞர் அண்ணா தம் சொற்பொழிவின் மூலம் வேண்டிக் கொண்டிருப்பதற்கொப்ப, எந்தவகைத் தொல்லைகளையும் துச்சமென மதித்துப் புத்துணர்ச்சியுடனும், மனஉறுதியுடனும், அசைக்க முடியாக் கட்டுப்பாட்டுடனும் இயக்க வளர்ச்சி தொண்டை ஆற்ற இன்றே முனைந்து தொண்டாற்றுமாறு திராவிடப் பொது மக்களை வேண்டுகின்றோம்.

"மாலைமணி" நம் இயக்க வளர்ச்சி கருதி உழைக்கும் பத்திரிகை என்பதை அறிஞர் அண்ணா மாநாட்டில் எடுத்துரைத்தார். நம் பத்திரிகை இயக்கத்தின் வளர்ச்சிப்பணி ஒன்றையே குறிக்கோளாக உடையதாதலின், இடையறாது இயக்கத் தொண்டாற்றி வரும். மற்ற நம் தோழர்களும் இவ்வாறே சற்றும் குன்றாமல் தீவிரமாக இயக்கப்பணி புரிந்து திராவிட மெங்கும் மக்களிதயத்தில் திராவிடரியக்கத்தைப் பதியவைக்க வேண்டுகிறோம்.

## திராவிடரை நசுக்க...

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

தான் தடியடி தர்பார், துப்பாக்கிப் பிரயோகம், பேச்சுரிமைப் பறிப்பது எழுத்துரிமைப் பறிப்பது, கூட்டங்களுக்குத் தடை விதிப்பதுபோன்ற காரியங்களாகும்.

குன்றத்தூரிலே 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று நமது இயக்க இலட்சிய ஒலியை எழுப்பிய நமது முன்னணி வீரர்களை யெல்லாம் விரட்டியடித்துத்துப்பாக்கிக் கொண்டுச் சுட்டு, தொல்லை கொடுத்ததுபோதாது என்று, ஜவுளி வாணிகத்திற்காகச் சென்ற தோழர்களை எல்லாம் கலாட்டா செய்தார்கள் என்று ஒரு பொய்யான சோடனை செய்து 332, 188, 148, செக்ஷன்படி கைது செய்து ரையிடிங் கேசும் போட்டிருக்கிறார்கள்.

### இதற்கெல்லாம் காரணம் என்ன?

எப்படியாவது கொள்ளை, கொலை சம்பந்தமான குற்றச்சாட்டுகளை, நமது இயக்கத் தோழர்களின் மீது சுமத்தி அதையே-அதாவது இவர்கள் கற்பனை செய்கின்ற கொள்ளை, கொலை கேசுகளை வைத்துக் கொண்டே நமது இயக்கத்தைச் சட்ட விரோதமாக்கிவிடலாம் என்று இவர்கள் கருதுகிறார்கள்.

இனிமேல்தான் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். கட்டுப்பாடு என்ற கேடயத்தைத் தாங்கி, ஒழுக்கம், ஒற்றுமை, கொள்கை உணர்ச்சி என்ற ஆயுதங்களால் தான் இவற்றைத் தடுக்க முடியும். இன்றைய ஆட்சியாளர்களுக்குத் தப்பு செய்தவன்தான் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கொள்கை கிடையாது. அவர்களின் கண்களுக்கு மாறுபட்டவர்களாக யார்—யார் தெரிகிறார்களோ அவர்கள் எல்லோருமேதான் தண்டிக்கப்படுவார்கள். உதாரணமாகத் திருச்சி மாவட்டம், தென் ஆர்க்காடு மாவட்டம் ஆகிய ஊர்களிலே நமது இயக்கத் தோழர்கள் இரவில் வெளியூர்களுக்குச் சென்று கழகப் பிரச்சாரம் செய்துவிட்டு வந்துகொண்டிருந்தபோது காங்கிரஸிலே உள்ள சில காலிகள் வழிமடக்கி அவரிாள் கொண்டுவெட்டி தடிகொண்டு தாக்கியிருக்கிறார்கள். அவர்கள் மேல் அந்த மாவட்டப் போலீசார் வழக்குத் தொடுத்தார்கள் ஆனால் வழக்கு நடைபெற வில்லை. நாம் மிக—மிக நல்லவர் என்று கருதிக் கொண்டிருக்கிறோமே ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் பிரதமராக இருந்த காலந்தான் இது, உடனே போட்ட வழக்கை வாபஸ் செய்து கொள்ளும்படி போலீஸாருக்கு அமைச்சரிடமிருந்து தாக்கீது வரவே "வழக்கு வாபஸ்" வாங்கப்பட்டு விட்டது.

உண்மையாகவே சொல்கிறேன் தோழர்களே இவ்வளவு பிற்போக்கான ஆட்சியிலேநாம் இருக்கிறோம் என்று எண்ணும்போது உள்ளம் அடையும் வேதனையை அளவிட்டுரைக்க முடியாது என்றே சொல்ல வேண்டும்.

ஆட்சி! கொடுமையும், மடமையும் நிறைந்த இவர்கள் ஆட்சி மதச் சார்பற்ற ஆட்சியாம். கிருஷ்ணஜயந்தி, ஸ்ரீராமநவமி, தீபாவளி, ஆவணி அவிட்டம், பிள்ளையார் சதுர்த்தி, காமன் பண்டிகை இது போன்ற விழாக்களிலே மந்திரிகள் பங்கு கொள்வது. இத்தகைய ஆட்சிக்குத்தான்—பெயர் மதச் சார்பற்ற ஆட்சியாம். இது மதச் சார்பற்ற சர்க்காராம். இதற்கு ஆசியாவின் ஜோதி ஜவர்கர்லால் தலைவராம். இத்தகைய தவறுகளை—ஒரு சாதாரண மாடுமேய்க்கும் சிறுவன்கூடச் செய்வதற்கு அஞ்சும் காரியத்தை-நாடாளும் அமைச்சர்கள் செய்வது இது இன்றைய ஆட்சியின் நிலை. நாம் செய்யும் தொண்டினைபோல் எந்த அரசியல் வாதியும், எந்த உயர்தத்துவவாதியும் நாட்டிலே செய்ததில்லையெனக் கூரை மீதேறிக் கூறலாம்.

நமக்கு நாட்டிலே ஆட்சி புரியும் ஆட்சியாளர்களின் எதிர்ப்பு, ஆரிய மாயையில் உழலும் வைதிகர்களின் எதிர்ப்பு, சமயவாதிகளின் சலசலப்பு, ஜாதீய ஆசார பூபதிகளின் எதிர்ப்பு, உல்லாச வாழ்வு வாழும் பணமூட்டைகளின் எதிர்ப்பு, பதவி விரும்பிகளின் எதிர்ப்பு மற்ற பிற எத்தனையோ எதிர்ப்புகள் நமக்கு நாட்டின் நாலாபக்கத்திலிருந்தும் ஒரு காலத்தில் இருந்தது. ஏன் இன்னமும்கூட இருக்கிறது. அப்படி இருந்தும் இந்த நாட்டில் எந்த அரசியல் கட்சிகளும் பெறமுடியாத பெரும் பலத்தைப் பெற்று நாம் வளர்ந்து வருகிறோம். இவற்றிற்கெல்லாம் காரணம் நமது கொள்கையான அடிப்படைத் தத்துவமும், நமது தோழர்களின் இடைவிடாத உழைப்புமே என்பதை நான் சொல்லாமலேயே நீங்கள் நன்குணர்வீர்கள்.

### நாம் கோரும் திராவிடத்தின் பொருளாதார நிலை

தோழர்களே! நமது மாகாணத்திலே இருக்கிற தொழிற் கட்சிகள் அதாவது சோஷலிஸ்டுகள், கம்யூனிஸ்டுகள் என்பவைகள் நாம் எந்த அடிப்படையில் திராவிடநாடு கேட்கிறோம் என்பதையே அறிந்துகொள்ளவில்லை. நமது திட்டம் நிறைவேறி, நமது நாடு நம் கைக்கு வந்தால் இந்த நாட்டிலே, தொழிலாளி-முதலாளி, ஏழை—பணக்காரன், பார்ப்பான்—பறையன் இருக்க மாட்டான் என்று நமது இயக்கப், பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களும் நல்ல விளக்கத்தை நாடு அறிய, 'இந்நாட்டின் பட்டி—தொட்டிகள், மூலை—முடுக்குகள் வரை பல ஆயிர மக்கள் கூடி இருக்கின்ற பலகூட்டங்களிலே சொல்லி வந்தார்கள். சொல்லி வருகிறார்கள். இனியும் சொல்லி வருவார்கள்; நாமும் சொல்வோம்.

இதைவிட எந்தச் சாதனையான திட்டத்தை இந்த நாட்டின் சோஷலிஷ்டுகளோ, அல்லது கம்யூனிஸ்டுகளோ, இவர்கள் எதிர்பார்க்கும் ஆட்சியில் செய்துவிட முடியுமா என்று கேட்கிறேன்.

ஆகவே மீண்டும் உங்களை அனைவரையும் வரவேற்கிறேன். வாழ்க திராவிடம்.

## ஏழைகள் வாழ்வு ஏற்றமடையவே . .

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

களைப் பேசப் பணித்தேன். அவர்களும் அதன் பிரகாரம் பேசினார்கள். இரண்டு நாட்களாக நீங்களும் நமது தம்பிமார்களின் பேச்சைக் கேட்டீர்கள். எங்கேயாவது பிராமணனைப் பற்றித் தூற்றியோ தாக்கியோ பேசியதைக் கேட்டிருப்பீர்களா? இல்லை. ஏன்? பேசத் தெரியாதா-தெரியும். ஆனால் அந்த விஷயம் பேசிப் பழமையாகப் போனது மட்டுமல்ல. பிராமணீயமே அந்த நிலைமைக்கு வந்துவிட்டது. நம்மிடம் ஒளிவில்லை-சதித்திட்டமில்லை-நாம் பேசுவது ஏழை எளியவர்கள் வாழ்க்கை சீர்பட வேண்டுமென்பதேயாகும். இதற்கு நாடு பிரிந்தாகவேண்டும். அதுதான் திராவிட நாடு என்பது இதில் தவறென்ன? அவர்கள் செய்யவேண்டியதை நாம் செய்கிறோம். இதைக் கண்டாவது இந்த மாகாண சர்க்காருக்குப் புத்தி வாராதா என்று கேட்கின்றேன். நமது மாகாணத்தை ஆளும் அமைச்சர்களும், அவர்களை ஆட்டிப் படைக்கும் மத்திய அரசாங்க அமைச்சர்களும் தங்கள் குறிப்பு எடுப்பவரின் மூலம் விவரம் அறியட்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலம் நமக்கு பண்பில்லையா கொள்கையில்லையா என்பதைத் தெரிந்திருப்பார்கள். ஆனால் தெரியாது என்று அமைச்சர்கள் நம்மீது துவேஷமாகவே சொல்லுகிறார்கள். அல்லது அறிந்தோ, அறியாமலோ சொல்லுகிறார்கள். இதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை.

### ஏமாற்ற மடைந்தனர்

திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் பிரிந்து கொண்டதால் அவைகளின் போக்கிலே தளர்ச்சி ஏற்படும் என்று அரசாங்கத்தினர் நினைத்தனர். ஆனால் அதற்கு நேர்மாறாக அவர்கள்தான் ஏமாற்றமடைந்தனர். நமது கழகம் இன்று வளர்ச்சியடைந்துள்ளது. இதைக் கண்டு நாம் பூரிப்படைகிறோம். அத்துடன் ஒரு புதுப் பொறுப்பையும் நாம் ஏற்கத்தான்வேண்டும்.

### செயல்மூலம் காட்டினோம்

நாம் இதுவரை 10 மாநாடுகள் வரை நடத்தி இருக்கிறோம். கடும் குளிர் வீசும் ஆனைமலையிலிருந்து, சீமான்கள் வாழும் கோவை நகர் வரையிலும், பந்தலைக் கொளுத்திய மதுரை நகரிலிருந்து, சிவகங்கை வரையிலும் பல மாநாடுகளை நாம் நடத்தி இருக்கிறோம். எனவே நமக்குப் பலவிதமான பொறுப்புகள் உண்டு. பல கஷ்டங்கள் நம்மை எதிர்நோக்கி இருக்கின்றன.

பொதுச் செயலாளராக இருக்கும் நான் திடீரென ஆயிரம் ரூபாய் தந்து உதவ முடியாது. நான் பணக்காரன் அல்ல, பொப்லிராஜாவும் அல்ல, பணம் படைத்த சரிகைத் தலைப்பாகையுடைய கூட்டத்தையும் சார்ந்தவனல்ல. உங்களுடைய கூட்டுப் பொறுப்புதான் என்னை ஊக்கத்துடன் சேவை செய்ய வைத்தது. அந்தக்கூட்டு சேவையை இன்று இங்கு நடைபெறும் இரண்டு நாள் மாநாட்டிலும் நான் நன்றாகக் கண்டேன் உங்களுடைய உற்சாகமும், ஒத்துழைப்பும் தான் நமது குறிக்கோள் வெற்றி பெற உதவி செய்தது.

### சரிகைத் தலைப்பாகைகள் இல்லை

முன்பெல்லாம் மாநாட்டிற்குத் தலைமை வகிப்பவர் பெரிய சரிகைத் தலைப்பாகைக்காரராக இருப்பர். அதுமட்டுமல்ல எவ்வளவு பணம் மாநாட்டுக்குக் கொடுப்பார் என்று பார்ப்பது வழக்கம் அதன்படி அவர் வேண்டியதைத் தருவார். ஆனால் இன்று நாம் தலைவர் தேடுவதாயிருந்தால் மாநாட்டிற்குக் குறைந்த செலவில், யார் வருவார் என்று கணக்குப் பார்க்கும் நிலையில் இருக்கிறோம். இதைத் தெரிந்தேதான் நாம் தலைவர் தேர்ந்தெடுக்கிறோம். எனவே நமது கொள்கைகள் வெற்றிபெற நமக்கு அதிகமாக கட்டுப்பாடு தேவை. நம்முடைய கட்டுப்பாட்டைக் கண்டு போலீசாரே பிரமித்துப் போக வேண்டும். சாதாரண உடையில் இருக்கும்போது இவ்வளவு கட்டுப்பாடு இருக்கிறது என்றால், இராணுவ உடையணிந்து வந்துவிட்டால் எப்படி இருக்கும் என்று அவர்கள் ஆச்சரியப்படவேண்டும். நேற்றுச் சற்று கட்டுப்பாடு அற்ற முறையில் நடந்துகொண்டதாகக் கேள்விப்பட்டேன். இந்த நிலை நம்மை விட்டு மாற வேண்டும்.

### மேல் நாட்டில்!

கிரேக்க நாட்டில் தான் முதன் முதலில் இதுபோன்ற நாடகங்களைத்திறந்த வெளியில் நடத்தினார்கள். அதைப்போலவேதான் நாம் இங்கு திறந்த வெளியில் நாடகம் நடத்துகிறோம், காரணம் நமது நாடகங்களுக்கு 20 ஆயிரம் 30 ஆயிரம் மக்கள் கூடுவதாலேயே. இப்படிப்பட்ட நேரத்தில் தான் நமக்கு கட்டுப்பாடு அதிகம் தேவை என்பதை நான் சொல்லவேண்டியதில்லை. கட்டுப்பாடு இல்லாத கழகம் எப்படிப்பட்டதாயினும், அக்கழகம் கல-கலத்துப் போகும் என்பது நீங்கள் அறிந்ததே.

திராவிடர் கழகத்தில் தனிப் பொறுப்புதான் இருந்தது. ஆனால் தி. மு, கழகத்தில் கூட்டுப் பொறுப்புதான் அதிகமாக இருக்கிறது. இதை நீங்கள் சற்று கவனிக்கவேண்டும். தி. மு. கழகத்தில் எல்லோரும் திட்டங்களைத் தீட்டலாம். தனியாக ஒருவர் இருந்து வேலை செய்வது அந்த ஆட்களின் சக்தியை-திறமையைப் பொறுத்தேதான் இயக்கம் வளர முடியும். ஆகவேதான் கூட்டுப் பொறுப்பு தேவை என்று சொன்னேன்.

நாம் இன்னும் கூடிய விரைவில் மாகாண மாநாடு சென்னையில் நடத்தப் போகிறோம். இந்த மாவட்ட மாநாட்டிலேயே இந்தக் கூட்டுப் பொறுப்பு-கட்டுப்பாடு இல்லை என்றால், பல லட்சக் கணக்கான மக்கள் வந்து கூடும் அந்த மாநாட்டில் நாம் எப்படிச் சமாளிக்க முடியும்.

### சிந்தித்துப் பாருங்கள்

நமது மாநாட்டிற்கு மாற்றுக் கட்சித் தோழர்கள் பலர் வந்திருப்பார்கள். வந்திருக்கிறார்கள் அது இயற்கையும்கூட. கடந்த இரண்டு நாட்களாக நமது கழகப் பேச்சாளர்கள் பேசினார்கள். கல்வி திட்டம் பற்றி நெடுஞ்செழியன் பேசினார், விவசாயத்தின் நிலைபற்றி இளங்கோ பேசினார், மதத்தைப் பற்றி நடராசன் பேசினார், சட்டத்தைப்பற்றி மதியழகன் பேசினார். இன்றைய ஆட்சியைப்பற்றி சம்பத் பேசினார் இன்னும் கருணாநிதி ஆகியோர்கள் கனல் தெறிக்கப் பேசினார்கள். இவர்கள் பேச்சிலிருந்து, மாற்றுக்கட்சிக்காரர்கள் ஏதாவது குறைகாண முடியுமா? உங்களிடையே தேசியத் தோழர்கள் தவறான பிரசாரம் செய்து வைத்துள்ளார்களே, அவர்கள் சொன்னவற்றிற்கும், இன்று நாங்கள் பேசியவற்றிற்கும் உள்ள வேறுபாட்டை நீங்கள் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

### நாங்கள் கடவுள் துவேஷிகளா?

எங்களைக் கடவுள் துவேஷிகள் என்று சொல்லுகிறார்கள். இரண்டு நாள் பேச்சுக்களிலும் கடவுளைப்பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை, இருக்கும் கடவுள்கள் போதாது என்றோ, இன்னும் பல கடவுள்கள் தேவை என்றோ கூறி உங்களிடம் பண வசூல் செய்யவில்லை. எங்கள் பிரசாரத்திலே ஒரு கடும் சொல், அல்லது தூற்றல் ஏதாவது இருந்ததுண்டா? என்று உங்களைக் கேட்கிறேன். உங்கள் ஆட்சியிலே-மூன்று ஆண்டுகளாக நடத்திவரும் நிர்வாகத்திலே உள்ள குறைகளைச் சொன்னோம். இவைகளை மறுக்கக் கூடிய தோழர்கள் இங்கு யாரேனும் இருந்தால், அவர்களை மேடைக்கு அழைக்கிறேன். அவர்கள் தாராளமாகச் சொல்லலாம் இங்கு மட்டுமல்ல வேறு எங்கும் சொல்லலாம் அதை நான் வரவேற்கிறேன். நகர சபையார் இந்த ஊரில் நடத்தப்படும் காப்பி கிளப்களுக்கு - ஜாதிப் பாகுபாடுகளைக் குறிக்கும்ஓட்டல்களுக்குலைசன்ஸ் வழங்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டு ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் தலைவர் சிறு ஐயப்பாடுகளைச் சொன்னார். நகர சபையில் உள்ள மக்கள் இதை வற்புறுத்த வேண்டும். அதைக் கவனிக்க அவர்கள் மறுத்துவிட்டால் பின்னர் பொது மக்கள் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். இந்த மாவட்டத்திலே நல்ல பிரசாரம் செய்ய வேண்டும். நான் இங்கே இருக்கிறேன் என்ற காரணத்தால் இதைச் சொல்லவில்லை. நான் பெரும் பகுதி வெளியிடங்களிலே இருக்கக் கூடியவன்.

### பண வசதி இல்லை

நாம் முதன்-முதலில் கழகத்தை ஆரம்பிக்கும்போது நமக்குப் பண வசதி இல்லை. இந்த நிலையில் நமக்கு நல்ல தினசரி இல்லை என்றால் என்ன செய்ய முடியும். ஏற்கனவே ஒப்புக்கொண்ட தோழர்

(4-ம் பக்கம் பார்க்க)

குறைந்த கட்டணம் மகத்தான 8-வது வாரம்

**சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் 27—12—50 புதன் மாலை 6-மணிக்கு**

தோழர் **C. N. அண்ணாத்துரை** அவர்கள் தலைமையில்

நடிகவேள் **M. R. ராதா** நடிக்கும்

# ரத்தக்கண்ணீர்

குறிப்பு:—பிரதி, திங்கள், புதன், வெள்ளி, ஞாயிறு மாலை 6-மணிக்கும், செவ்வாய், வியாழன், சனி இரவு 9:30-மணிக்கும் நாடகம் நடைபெறும்.

டிசம்பர் 31-ந்தேதி எமது வந்தனோபசார கடைசி நாடகம்

கட்டணம் :— 0—5—0, 0—10—0, 1—2—0, 2—0—0, 2—10—0.

## ஏழைகள் . . .

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் தங்கள் ஒப்புதல் பணத்தைத் தரவில்லை. எனவே கூட்டுக் கம்பெனியை ரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது இந்த நிலையில் நாம் தின்சரி எப்படி நடத்த முடியும். "மாலைமணி" வருகிறது இதைக் காட்டிலும் நல்ல பத்திரிகை துவக்க வசதிப் பட்டால் நிச்சயம் துவக்கி விடுவோம். இதற்காக நாம் மனம் தளர்ச்சியடையத் தேவை இல்லை.

### சரித்திர நாடகம்

நேற்று நடத்திய நாடகம் பற்றிப் பலர் பேசியதாகக் கேள்விப்பட்டேன். அது கற்பனை அல்ல. சரித்திர நாடகம். இந்த நாடகத்தில் வரும் பெயர்கள் கூட சரித்திரத்தில் உள்ள பெயர்களே. இன்னும் இந்த நாடகத்தில் சிவாஜிக்கு ஆராதனை செய்யும்போது, 17 பார்ப்பன பெண்கள் வருகின்றனர். நமக்கு 27 பார்ப்பனப் பெண்கள் கிடைக்க மாட்டார்களே என்ற காரணத்தால்தானே அந்தப் பகுதியை நீக்கியுள்ளோம். (கை தட்டல்) நான் சொல்வதில் தவறு இருப்பின் ஓராண்டிற்கு முன் இது பற்றி ஓர் அய்யரால் எழுதப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரையை "இந்தியன் எக்ஸ்பிரஸி"ல் (Indian Express) பார்க்கலாம். மற்றும்பல வரலாற்று நூல்களிலே இவை இருக்கின்றன.

### கடைசிக் கருவி

என்னைப் பற்றி சிலர் துவேஷ மொழிகளில் எழுதுவதாக நண்பர்கள் சொன்னார்கள். துவேஷப் பிரசாரத்தால் எந்த இயக்கமும் அழிந்துவிடவில்லை. ஜின்னாவையும் இப்படித்தான் கிண்டலாக எழுதினார்கள்-பேசினார்கள். அதைக்காட்டிலும் நம்மை திட்டிவிடப் போகிறார்களா? ஜின்னாவைத் திட்டியவர்கள் என்ன ஆயினர்? பின்னர் காந்தியாரே மலபார் ஹில்ஸ் சென்று தோழர் ஜின்னாவைக் கண்டார் அதைப்போலவே இன்று நம்மைத் திட்டுபவர்களே கூடிய விரைவில் நம்மை அழைத்துச் சமாதானம் பேசத்தான் போகிறார்கள், இது உறுதி. காங்கிரஸ்காரர்களின் இந்தப் பிரசாரமே அவர்களின் கடைசி கருவி!

ஒரு காலத்தில் பெரியாரைப் பற்றிக் கண்டபடி பேசினார்கள் இதனாலெல்லாம் பெரியாரிடம் என்ன குறையைக் கண்டார்கள். ஓர் இயக்கத்தைத் திட்ட-திட்ட அந்த இயக்கம் வளருமே அல்லது மறையாது. (கைதட்டல்) நம்மைத் திட்டும் இவர்கள் மற்றொரு கையில் சமாதானம் பேசப் பேனாவை தயாராகவே வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

### அடைவோம் திராவிட நாடு!

நாம் நிச்சயம் திராவிட நாடு அடைந்தே தீருவோம். இது உறுதி. நாம் எந்தக் காரியத்திலும் யோசிக்காமல், அந்தக் காரியத்தில் இறங்குவதில்லை. முடிவில்லாத காரியத்தைச் செய்வது மதவாதிகளே தவிர நாம் அல்ல! நம்முடைய கொள்கையை நமக்குத் தெரியாமல் ஐ. நாடுகள் சபையிலே தோழர் இராமசாமி முதலியார் கொண்டுவந்து பேசினாலும் நாம் ஆச்சரியப்படமாட்டோம். திராவிட நாடு, வட நாட்டாருடன் இணைந்திருப்பதால் இன்னின்ன நலமிருக்கிறது, பிரிந்து போனால் இன்னின்ன கெடுதல் இருக்கிறது என்று காங்கிரஸ் தோழர்கள் சொன்னால் அதை வரவேற்கலாம். அதை விடுத்து வீணாகப் பேசிக் கொண்டிருப்பதில் பயன் என்ன காணமுடியும்.

### ஆந்திரர்கள் ஒப்பினர்களா?

திராவிட நாடு பிரிவினையை ஆந்திரர்கள் ஒப்புக் கொண்டார்களா? என்று கேட்கப்படுகிறது. அவர்கள் ஒப்புக்கொண்டார்களா என்பதை நாமறியோம். ஜின்னா பாக்கிஸ்தான் கேட்கும்போது அவரது சகாக்களே சிலர் எதிர்த்தனர் ஆயினும் பாக்கிஸ்தான் கிடைத்தது. அதுபோலவே நமக்கும் திராவிட நாடு கிடைத்துத்தான் தீரும், மலையாளிகள் மறுத்தாலும், ஆந்திரர்கள் ஆதரிக்காவிட்டாலும், கன்னடர்கள் கண்டித்தாலும் திராவிட நாடு கிடைப்பது உறுதி என்று கூறுகிறேன். எனவே நீங்கள் நமது இயக்கப் பிரசாரத்தை மனத்தளர்ச்சியின்றிச் செய்ய வேண்டுகிறேன்.

## காஞ்சீபுரம் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தர்கா மைதானம் சுமார் 3 ஏக்கர் நிலப்பரப்புக் கொண்டது. இந்த இடத்தில் மாநாடு நடைபெறவும் மக்கள் அமரவும் 300+200 அடி அளவில் மிகப் பிரமாண்டமான பந்தல் போடப்பட்டிருந்தது. தலைவர்கள அமரவும், இரவில் நாடகம் நடத்துவதற்கும் ஏதுவாக இருக்கும் அளவில் நல்ல முறையில் மேடை அலங்காரம் செய்யப்பட்டிருந்தது.

மாநாட்டுப் பந்தலின் ஒவ்வொரு தூணிலும் இயக்கத்தின லட்சியத்தைக் குறிக்கும் சொற்களடங்கிய அட்டைகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

ஆரியத்தின் கோட்டிற்கு தலை குனிந்து கொடுக்கும் காமராஜரின் காட்சியும், இந்நாட்டில் இராணுவத்தின் பெயரால் பல கோடிக் கணக்கான பணத்தை விரயம் செய்யும் விதத்தை விளக்கும் படங்களும், மந்திரி சபையிலே பிரகாசத்திற்கும். மற்ற மந்திரிகளுக்கும் நடைபெறும் போராட்டங்களை விளக்கும் சித்திரங்களும், தமிழனின் வீரத்தைக் குறிக்கும் சித்திரங்களும் அழகுறத் திட்டப்பட்டு, ஆங்காங்கே மாட்டப்பட்டிருந்தது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. மாநாட்டுப் பந்தலுக்கு முன்னால் அனேகவிதமான புத்தகசாலைகளும், சிற்றுண்டி சாலைகளும், ஜவுளிக் கடைகளும், வெற்றிலைப் பாக்குக் கடைகளும் காட்சியளித்தன. இது ஒரு மாகாண மாநாடு போலவே காட்சி யளித்தது.

### மாநாடு துவக்கம்

பின்னர் மாநாடு தோழர் சி. பி. சிற்றரசு தலைமையில் வெகு சிறப்புடன் துவங்கியது. தலைவர் தமது வீர முழக்கத்துடன் திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

விருதை, 'தனி அரசு' ஆசிரியர் தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி மாநாட்டைத் துவக்கி வைத்து உணர்ச்சிமிகுந்த சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். பின்னர் நிகழ்ச்சி குறிப்பில் கண்டபடி அலுவல்நடைபெற்று ஞாயிறு இரவு 2-30 மணிக்கு நீதிதேவன் நாடகத்துடன் முடிவு பெற்றது. நாடகத்திற்கு மோழர் நடிகவேள் எம். ஆர். ராதா அவர்களும் தோழர் டி. எம். ராஜநாயகம் அவர்களும் வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு:-காஞ்சியில் நடைபெற்ற தி. மு. க. முதல் மாநாடு மிகமிகச் சிறப்பாக நடைபெறுவதற்கு முக்கியப் பங்கு கொண்டவர்களுள் ஒருவர் தோழர் இராம. அரங்கண்ணல் துவக்க முதல் மாநாடு நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்தி மாநாட்டுத் தலைவருக்கு உதவியதுடன் நாடகத்திலும் முக்கிய பங்கேற்று மிகச் சிறப்பாக நடித்தார். பொதுவாகக் கூறுமிடத்து மாநாடுவெற்றியுடன் நடைபெற்றது என்ற பெருமை முழுமையும் தோழர் இராம. அரங்கண்ணல். தோழர் ஈழத்துஅடிகள் ஆகிய இருவரைச் சார்ந்ததாகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். -ஆசிரியர்

---

நாகர்கோவிலில் நாஞ்சில் மாவட்ட

# திராவிட முன்னேற்றக் கழக

# முதல் மாநாடு

இடம்:—(கிருஷ்ணன் கோவில்) தியாகராயர் பந்தல்

(ஆங்கிலப் பாடசாலை சமீபம்)

டிசம்பர் 29, 30 (வெள்ளி சனி) நாட்களில்

தலைவர்:

## இரெ. இளம்வழுதி

துவக்குபவர்:

## என். எஸ். இளங்கோ

பொதுச்செயலாளர் அண்ணாதுரை, பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரை, M. A., L. T., இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ஈ. வி. கே. சம்பத், ஈ. வெ. அ. வள்ளிமுத்து, என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் மற்றும் பல இயக்கத் தோழர்களும் பங்குகொள்வர்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரை,

நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி

குழுவினர் நடிக்கும் நாடகங்கள்

## "நீதிதேவன் மயக்கம்"

வெள்ளி இரவு

## "சந்திரமோகன்"

சனி இரவு

வரவேற்புக்குழு.

---

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I.